## பாடப்பகுதி 8 நாட்டுப்புறவியல் (Folk Lore)

**படிப்பு நோக்கம் (Objectives)**

★ நாட்டுப்புற இலக்கியம் மூலம் நாட்டுப்புற மக்களின் தமிழை அறிமுகப்படுத்துதல்

★ பேச்சு வழக்குச் சொற்களின் பயன்பாட்டினை அறிந்து கொள்ளுதல்

★ பேச்சு வழக்குச் சொற்களுக்கிணையான இலக்கிய வழக்குச் சொற்களை அறிய முயலுதல்

★ நாட்டுப்புற இலக்கியம் தொடர்பான — மொழிப்பயன்பாடு — பண்பாட்டுக் குறிப்புகளை விளங்கிக் கொள்ளுதல்

**பாடக் கருத்தலகுகள் (Structure)**


8.0 பாட முன்னுரை

8.1 நாட்டுப்புற இலக்கியம்

8.1.1. தாலாட்டு

8.1.2. விடுகதை

8.2 நாகரிகமும் பண்பாடும்

8.2.1. நம்பிக்கைகள்

8.3 பாடத்தொகுப்புரை

8.4 தொடர்ந்து படிப்பதற்குரிய துணைநூல்கள்.


## 8.0 பாடமுன்னுரை

எந்த ஒரு மொழியும் பேச்சு வழக்கிலிருந்தே பிறந்து வளர்ந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

**அவெ படிச்சான் என்பது பேச்சுத் தமிழ் அல்லது பேச்சு வழக்கு**
**அவன் படித்தான் என்பது ஏட்டுத் தமிழ் அல்லது இலக்கிய வழக்கு**

பேச்சு வழக்கு வேறு; இலக்கிய வழக்கு வேறு. பேச்சுத் தமிழ் 'வாய்மொழி வடிவம்' என்றும், இலக்கியத் தமிழ் 'வரி வடிவம்' என்றும் வழங்கப்படுகின்றன. வாய்மொழியிலிருந்தே வரிவடிவ மொழி வளர்ந்துள்ளது. வாய்மொழியாக வழங்கிவரும்

இலக்கியமே நாட்டுப்புற இலக்கியம் எனப்படும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே வாய்மொழியாக வழங்கிவரும் நாட்டுப்புற இலக்கியத்திற்குத் தமிழ் இலக்கியங்களில் தொன்றுதொட்டு சிறப்பிடம் நல்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருவாசகம், தாயுமானவர்,வள்ளலார்,பாரதியார் பாடல்கள் போன்ற இலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு மிகுதியுமுள்ளது. பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு என்ற இவ்விரண்டின் இயல்புகளும் தமிழில் தொல்காப்பியர் காலம் முதல் உள்ளன. எனினும் பேச்சுத் தமிழ் நாட்டுப்புற இலக்கியத்திற்கேயுரிய தமிழாகும். நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கத்தால் பேச்சு மொழித் தமிழ், பேச்சு வழக்கு மரபு போன்றன இன்றும் இலக்கியத் தமிழில் பின்பற்றப்படுகின்றன.

'பாட்டினைப் போல் இன்பம், இப்பாரின்மிசை இல்லையடா' என்றார் பாரதி. ஆனால் நாட்டுப்புறப் பாடலினைப் போல் இன்பம் எங்கும் இல்லை எனலாம்.

> ''அன்னக்கிளியே சாய்ந்தாடு
> ஆயிரம் பூவே சாய்ந்தாடு
> குத்துவிளக்கே சாய்ந்தாடு
> கோயில் புறாவே சாய்தாடு''

என்று நாட்டுப்புறப் பாடலில் ஓர் அன்புத்தாய் தன் பிள்ளைக்கனியமுதைக் கொஞ்சு தமிழில் கெஞ்சி விளையாடுகிறாள். நாட்டுப்புறப் பாடலில் பயின்றுவரும் பேச்சுத் தமிழ்ச்சொற்களும், அதன் இயல்புகளும் படித்தும் உணர்ந்தும் இன்புறுதற்குரியன.

**நாட்டுப்புறவியல்: விளக்கம்**

நாட்டுப்புறம் என்பது கற்காத கிராமியப் பகுதிகளையே குறிக்கும். இக்கிராமப் பகுதியிலுள்ளவர்களைக் கிராமத்தான், பட்டிக்காட்டான், பாமரன், நாட்டுப்புறத்தான், ஊர்மகன் எனப் பலவாறு பெயரிட்டு அழைக்கின்றனர். 'நாட்டுப்புறவியல்'என்பது நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட படைப்புக்கள் (Traditional creations) ஆகும். எனவே நாட்டுப்புற மக்களின் இலக்கியம் (பாடல்கள், கதைகள்) கலை, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளும் இயலே நாட்டுப்புறவியல் என்பர்.

இப்பாடத்தில் நாட்டுப்புற இலக்கியம், நாகரிகமும் பண்பாடும் ஆகிய பிரிவுகளின் கீழ், நாட்டுப்புறத் தமிழ் அவ்வந் நிலைகளில் எங்ஙனம் பயின்று வருகிறது என்பதை விரிவாகக் காணலாம்.

## 8.1 நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்புற இலக்கியத்தைப் பாடல், கதை, கதைப்பாடல், விடுகதை, பழமொழி என்ற ஐந்து வகையாகப் பிரிக்கலாம். இவை மக்களது வாழ்க்கையில் பிறந்து மக்களது வாழ்க்கையில் வளர்ந்து மக்களது வாழ்க்கைக்கே பயன்படுவதால் இதனை மக்கள் இலக்கியம் என்பர். தாலாட்டு முதல் ஒப்பாரி வரை மனித வாழ்வினை ஒட்டிய பாடல்கள் அனைத்தும் நாட்டுப்புறப் பாடல்களுள் அடங்கும்.

இப்பகுதியிலுள்ள நாட்டுப்புற இலக்கியப் பிரிவில் தாலாட்டுப் பாடல்களும் விடுகதைகளும் நாட்டுப்புறத் தமிழில் நடைபயில்வதைக் கற்று இன்புறலாம்.

### 8.1.1 தாலாட்டு

தாலாட்டு வாய்மொழியாக மட்டுமின்றிப் புலவர்களால் இலக்கியங்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. எந்த ஒரு பாடலும் அதன் வாய்மொழித் தன்மையாலேயே உயிர்ப்புடையதாகிறது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து அப்பெருமானுடைய பெருமைகளையெல்லாம் சொல்லித் தாய்ப்பாசத்தோடு தாலாட்டும்போது நம் உள்ளம் நெகிழ்கிறது.

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ!

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத் தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண் கருமுகிலே தாலேலோ!
தேவகி சிங்கமே தாலேலோ!

(1, 3. 1, 4)

குழந்தைக்குத் தந்தையும் தாத்தாவும் மாமன்மாரும் என்னென்னவோ வாங்கி வருவார்கள் என்று பாடித் தாய் தாலாட்டித் தன் கற்பனையில் பரிசுகளைக் குவிப்பாள். பெரியாழ்வார் பிரமன் முதல் தேவர்வரை என்ன என்ன கொண்டுவருவார்கள் என்று வரிசைப்படுத்துகிறார். பெரியாழ்வாரின் திருமொழியைப் படித்துப் பாருங்கள்.

தாலாட்டு என்ற சொற்றொடர் தால் + ஆட்டு எனப் பிரியும். தால் என்றால் நா — நாக்கு. குழந்தையின் அழுகை ஒலியை அடக்கத் தாய் இதழ்களைக் குவித்து, நாவினை ஆட்டி ஒருவித குரலையிடுகிறாளே அதற்குத்தான் தால் ஆட்டுதல் என்று பெயர். அதைத் தொடர்ந்து இசைக்கும் பாடலையும் இன்று தாலாட்டென அழைக்கிறோம். தாலாட்டு உலகத்தில் ராராட்டு என மருவி வழங்குகிறது. இன்றும் மலையாளத்தார் 'தாராட்டு' என்றே வழங்குகின்றனர். இடைக்காலத் தமிழ் இலக்கியங்களிலும் 'தாராட்டு' எனும் வழக்கிருத்தல் கவனிக்கத்தக்கது. 'தேரை தாராட்டும் பண்ணை' என்கிறார் கம்பர்.

தாலாட்டுச் சந்தம் 'ஆராரோ ஆரிரரோ' என்று தொடங்கும். 'தன தான' என்பது போன்ற சந்தக் குறிப்பு இது. இதனை ராராரோ ராரிரரோ என்றும் ரூரிரோ, ரூரிரரோ என்றும் வாவாஓ என்றும் பலவாறு மாற்றி மாற்றிச் சந்தமமைப்பதைப் பல்வேறு பகுதிகளில் காணலாம். கன்னடத்தில் ஜோ ஜோ என இசையமைப்பதுண்டு. தமிழகத்தில் வழங்கும் தாலாட்டுப் பாடல்கள் பல மிக உயர்ந்த இலக்கிய இன்பம் தரும் கவிதைகளாகவே விளங்குகின்றன எனலாம்.

கொத்துவிடா நெத்தும் கோதுபடா மாங்கனியும்
பருவப் பலாச்சுளையும் பக்குவத்து மாங்கனியும்
அக்கரையில் சக்கரையும் அதிமதுரத் தென்னவட்டும்
காய்ச்சிய பாலும் கற்கண்டும் செந்தேனும்
ஏலங் கிராம்பும் இறங்கொடிக்கால் வெற்றிலையும்
சாதிக் களிப்பாக்கும் சங்குவெள்ளைச் சுண்ணும்பும்
அத்தனையும் கொண்டுன்னை அறியவந்தார் அம்மான்மார்
பழவருக்கம் கொண்டுன்னைப் பார்க்கவந்தார் அம்மான்மார்
கனிவருக்கம் கொண்டுன்னைக் காணவந்தார் அம்மான்மார்.

மேலே காட்டிய பெரியாழ்வார் பாடலுடன் இதனையும் ஒருங்கு வைத்துப் பாருங்கள். கற்பனை அழகு இரண்டிலும் பளிச்சிடுவது நன்கு விளங்கும்.

**குழந்தையின் பெருமையும் தாய்மையும்**

குழந்தை அழுவதும் அதைத் தாய்மார் தேற்றுவதும் சாதாரண நிகழ்ச்சிகள்; தாய் என்றும் பிள்ளை என்றும் என்றைக்கு ஏற்பட்டதோ அன்று முதல் தாலாட்டும் உள்ளது. 'தாலாட்டு இலக்கியம்' என்ற நூலிலுள்ள, பின்வரும் தாலாட்டின் ஒரு பகுதி.அதன் தனிச் சிறப்பினை நனி உணர வைக்கிறது.

முதலாவதாகத் தாலாட்டும் அன்னையிடத்து உள்ள தாய்மை உணர்ச்சியை மட்டும் எளிய சொற்களால் புலப்படுத்துகிற சில அடிகள் வெளிவருகின்றன. பாரதக் கதையை எல்லோரும் அறிவர். அதில் வரும் பாண்டவர்கள் நல்லவர்கள். அக்கதையோடு தொடர்புபடுத்தி, மகனைப் பாராட்டித் தாலாட்டுகிறாள் தாய்.

*ஆளப் பிறந்தானே*
*அரசாள வந்தானோ!*
*தானே வளர்ந்தானே*
*தருமர்கள் தந்தவனோ!*
*அஞ்சு குடிக்கரசோ*
*பஞ்சவர்கள் பாற்குடமோ!*

அடுத்து வருகின்ற சில அடிகள் மகனைக் கண்ட மகிழ்ச்சியைக் காட்டுகின்றன. மகனைப் பார்த்து மகிழ்ச்சியில் நிறைந்து நிற்கின்ற மனமானது தாலாட்டுப் பாடலைச் சொல்லுகிறது.

*முப்பாட்ட னாண்ட*
*முகப்புத் தலைவாசல்*
*தப்பாமல் ஆளத்*
*தவம்பெற்று வந்தானோ!*
*அப்பாட்ட னாண்ட*
*அரசு பலநாடு*
*தப்பாமல் ஆளத்*
*தவசுபண்ணி வந்தவனோ?*

என்று தாயின் கற்பனையிலே இம்மகன் எவ்வளவுதான் ஆளப்பிறந்தவனாய் இருந்தபோதிலும், தொட்டிலிலே கிடக்கும்போது, ஆழப்பிறந்தவனாகவேதான் காட்சி தருகிறான்! பிஞ்சுக் குழந்தை அஞ்சி அழும் காரணம் தெரியாது கெஞ்சுகிறாள் தாய். அவளுடைய ஒவ்வொரு சொல்லும் அந்த அழுகையை நிறுத்த முயலும் அவளது அன்புகெழுமிய பாசத்தைப் பறைசாற்றி நிற்கிறது.

அடுத்து தாய் கேட்கிறாள் குழந்தையிடம். அடித்தவர் யாரென்று தெரிந்தால், அவரைத் தண்டித்துவிடலாம் அல்லவா? எப்படிப்பட்ட தண்டனைகள் கொடுக்கலாம்?

*அடித்தாரைச் சொல்லியழு*
*ஆக்கினைகள் பண்ணிவைப்போம்;*
*தொட்டாரைச் சொல்லியழு*
*தோள்விலங்கு போட்டுவைப்போம்;*
*செய்தாரைச் சொல்லியழு*
*சேவகத்தை மாற்றியமைப்போம்;*

என்று பாடி நிறுத்துகிறாள். ஆயினும் பாட்டை நிறுத்தியவுடன் குழந்தை மறுபடியும் தன் அழுகையை மெல்லத் தொடங்கப் பார்க்கிறான். அதன் கண்ணின் கோடியிலே ஒரு துளி கண்ணீர் நிற்பது தெரிகிறது.

இங்கே கண்ணீரோ பிள்ளையின் கண்ணீர். பார்த்துச் சொல்பவளோ தாய். சொல்வதற்குக் கேட்க வேண்டுமா? குழந்தை அழுத கண்ணீர் குளமாகத் தேங்கி ஆறாய்ப் பெருகி ஓடுகிறதாம். எங்கெங்கே?

தாயார் மடி நிறைந்து
  தகப்பனார் தோள்நிறைந்து,
மாமி மடிநிறைந்து
  மாமனார் தோள்நிறைந்து,
சித்திரை மாதம்
  சிறந்த வெள்ளம் வந்துதுபோல்
வைகாசி மாதம்
  வசந்த வெள்ளம் வந்ததுபோல்

பெருகுகிறது குழந்தையின் கண்ணீர் வெள்ளம். பெருகி எப்படி ஓடுகிறது.

ஆறு பெருகி
  ஆனை குளிப்பாட்டிக்
குட்டம் பெருகிக்
  குதிரை குளிப்பாட்டி
குளமாகத் தேங்கிக்
  குதிரை குளித்தேறி
இஞ்சிக்குப் பாய்ந்து
  இருவாட்சி வேரோடி
மஞ்சளுக்குப் பாய்ந்து
  மருதாணி வேரோடி-

இப்படியாக எங்கெல்லாமோ ஓடிற்றாம் கண்ணீர் வெள்ளம்.

இதைத் தாய் சொல்லி வரும்போது குழந்தையும் உண்மையாகவே சற்றுக் கண்ணயரத் தொடங்கி விட்டான். தாய் இதைக் கவனித்தாள். தொட்டிலாட்டிய கைக்கும், பாடல் பாடித் தாலாட்டிய நாவுக்கும் சிறிது ஓய்வு வேண்டாமா? மணம் நிறைந்த இருவாட்சிக் கொடிக்கும் மரு தோன்றி மரத்துக்கும் பாய்ந்த கண்ணீர், அவற்றைக் கடந்து இப்பால் வந்தவுடனே, அப்படியே நின்று விடுகிறது.

தாழைக்குப் பாய்கையிலே
  தளும்பினதாம் கண்ணீரும்!
வாழைக்குப் பாய்கையிலே
  வற்றினதாம் கண்ணீரும்!

கண்ணீர் நின்று அழுகையும் நின்றவுடனே, தாலாட்டும் நிற்க வேண்டியதுதானே!

## மொழி, பண்பாட்டுக்குறிகள்

தாய் தன் குழந்தையைப் பெருமைப்படுத்த, இந்தத் தேசத்தின் பாரம்பரியமான இராமாயண பாரதக் கதைகளையும் முருகன், மீனாட்சி போன்ற கடவுளர்களையும், காசி இராமேசுவரம் போன்ற தலங்களையும் பயன்படுத்திக் கொள்கிறாள். அவள் பாடல்களில் உவமைகளும் உருவகங்களும் கூடிக் குலாவுகின்றன. கற்பனை வகைகள் எத்தனை உண்டோ, அத்தனையையும் அவள் பயன்படுத்திப் பார்க்கிறாள். குழந்தை அழுத கண்ணீர்தான், ஆடிப்பெருக்குப்போல் இத்தனை இடங்களுக்குமா பாயும்? ஒரு துளிக் கண்ணீர்தான், கற்பனையில் இவ்வளவு பெரிய வெள்ளமாகிவிடுகிறது.

சக்கரை, அஞ்சு, மருதாணி போன்ற உலக வழக்குச் சொற்களைத் தழுவி வருவதும், தேய்ந்த கொச்சை வடிவங்களை அப்படியே ஏற்பதும் நாட்டுப் பாடல்களில் காணலாம். ஆனாலும் அவற்றின்

செவ்விய வடிவங்கள் உடனுக்குடன் நமக்கு நினைவு வராமல் போவதில்லை. தமிழில் இங்ஙனம் உலகப் பேச்சு வடிவங்களைப் பேசும் போது பயன்படுத்துவதும் எழுதும்போது அவற்றின் திருந்திய வடிவங்களையே எழுதுவதும் ஒரு மரபாகும். இன்று வாய்மொழி இலக்கியத்தையும் எழுதி, அச்சிடும் பழக்கம் வந்து விட்டது. இருந்தாலும் இவை இரண்டின் இயல்பை அறிந்து, போற்றி வருவது தமிழின் இயல்பறிந்து பயன்படுத்துவதாகும்.

**தன் மதிப்பீடு: 1**

**வினாவும் பயிற்சியும்**

1. தாலாட்டு என்பதன் சொற்பொருள் விளக்கம் தருக?
2. நாட்டுப்புறவியலிலுள்ள உட்கூறுகள் யாவை?
3. கோடிட்ட இடத்தை நிரப்புக
   1. நாட்டுப்புறத் தமிழ் என்பது ____________________ ஆகும்.
   2. நாட்டுப்புறவியல் என்பது ____________________ ஆகும்.

### 8.1.2 விடுகதை

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டிய கதை /புதிர் ஆகும். வினா-விடை என்ற இரண்டின் அமைப்பும் இதில் காணப்படும். ஒருவர் வினாவாக ஏதாவது ஒன்று பற்றி வினவ, கேட்பவர் அவ்வினாக்குரிய விடையைக் கூறுவர். சில விடுகதைகளில் வினா, விடை இரண்டிலுமே புதிர்த்தன்மை காணப்படும்.

> ''விடுகதைகள் பெரும்பாலும் இருவர் அல்லது மூவர் உரையாடும் உரையாடல் அமைப்பில் இருக்கும். சிறுபான்மை பாடுவோர் கூற்றாக அமைதல் உண்டு. விடுகதைகளுக்கு அடிவரையறை எதுவும் கூற இயலவில்லை. கிடைத்திருக்கும் விடுகதைகள் மூன்று முதல் இருபது அடிகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. விடுகதைகள் இவ்வாறு தொடங்கும் என்றோ இவ்வாறு தான் முடியும் என்றோ வரையறை எதுவும் செய்ய இயலாது. இவ்விடுகதைகளைப் பாட்டு விடுகதை, உரைநடை விடுகதை என்று இரண்டாகப் பிரிக்கலாம்.
>
> பாட்டு விடுகதைகள் பாட்டு வடிவில் அமைந்திருந்தாலும் அவை இராகமாகப் பாடுதற்குரியவை அல்ல. உரைப்பாட்டுப் போலச் சொல்வதற்கு உரியவையாக அவற்றின் நடை அமைந்துள்ளது. பாட்டு விடுகதையில் முதலில் புதிர் நிறைந்த ஒரு பாடல் கூறப்படும். புதிரை விடுவிக்கும் பொறுப்பு பாடலைக் கேட்பவரிடம் விடப்படும். விடுவிக்கப்படும் விடை ஒரு கதையாக இருக்கும்.
>
> உரைநடை விடுகதையில் முதலில் கதை கூறப்படும். கதையின் இறுதி புதிர் நிரம்பியதாக இருக்கும். அப்புதிரினை விடுவிக்கும் பொறுப்பு கதை கேட்பவர்களிடம் விடப்படும். விடுவிக்கப்படும் விடை சுருக்கமா இருக்கும்''.

என்று விடுகதையின் தன்மையினை ஆறு. இராமநாதன் தமது 'காதலர் விடுகதைகள்' என்ற நூலில் விளக்குகின்றார்.

விடுகதைகளின் உருவம் பலவகையாக உள்ளது. ஒன்றிலிருந்து ஒன்று மாறுபடும். அம்மாற்றம் பெரிய வேறுபாட்டைக் காட்டவில்லை என்றாலும் பிரித்தறியும் வகையிலுள்ளது குறிப்பிடத்தக்கது. கீழே சில விடுகதைகளைக் காணலாம்.

எ-டு:

(1) **தண்ணீர்** கிணத்துலே
**கிண்ணி** மிதக்குது - அது என்ன?
**பதில்:** நிலவு.

இவ்விடுகதை வினா-விடை முறையில், எதுகை அழகுபட எளிதாக அமைந்துள்ளது.

(2) ''சளசளக்குமாம் சண்டைக்குப் போகுமாம்
அடக்கிக் கொண்டால் அகிலம் உனக்கு''- அது என்ன?
**பதில்:** நாக்கு

இவ்விடுகதையும் வினா-விடை முறையில் அமைந்துளது பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி, இது 'நாவை அடக்குவது நல்லது' என்ற கருத்தைப் போதிக்கிற தன்மையகைக் காணலாம். இனி கதை தழுவிய விடுகதைகளைப் பார்ப்போம். டாக்டர் ஆறு. இராமநாதன் 'காதலர் விடுகதைகள்' என்ற நூலில் இத்தகைய பல விடுகதைகளைத் தந்துள்ளார்.

(1) அறிந்தால் அடையலாம்
(கதை விடுகதை)

ஏரிக்கோரை தீய வேண்டும்
சம்பளமில்லாத சேவகன் தூங்க வேண்டும்
சட்டிக்கும் மத்துக்கும்
நடுவால வர வேண்டும்.

**கதை**

''ஒருத்தன் ஒரு பொண்ணு மேல ஆசப்பட்டான். பொண்ணு அவங்கிட்ட இந்த விடுகதைய சொல்லி, 'அப்படி வந்தா ஒனக்குப் பாரியையாயிடறேன்'னு சொல்லிட்டுப் போயிடறா. இதுக்கு அர்த்தம் தெரிஞ்சிட்டா அவள அடைஞ்சிடலாமே. இதுக்கு என்ன அர்த்தம்? யோசிச்சு யோசிச்சு கடைசியா கண்டு புடிச்சிட்டான். அவ சொன்ன மாதிரியே போனான். அவ அவனோட அறிவை மெச்சி அவனையே கட்டிக்கிட்டா? எப்படின்னு கேக்குறீங்களா?

அகல் வெளக்குல எண்ண ஊத்தி வச்சிருக்கிறது கொளம் மாதிரிதான இருக்கு. அதுல இருக்குற திரிசலு கொளத்துல இருக்குற கோர மாதிரிதான இருக்குது. ஏரிக்கோர தீயறதுண்ணா வெளக்குல இருக்குற எண்ண தீந்ததுக்கப்புறம் திரிசல் தீஞ்சி வெளக்கு நிண்ணுடறது. 'சம்பளமில்லாத சேவகன்' யாரு? நாயி. அதுக்கு சம்பளமா குடுக்குறாங்க? ஆனா அது காவ காக்குதுல்ல. அது தூங்க வேண்டும். அப்பவும் சட்டி செய்யிற கொசவன் ஊட்டுக்கும் மத்து செய்கிற தச்சன் ஊட்டுக்கும் தெருவால அவ ஊடு.

வெளக்கு அணையற வரைக்கும் காத்துகிட்டிருந்து நாயெல்லாம் அசந்து தூங்கனதுக்கப்பறம் நடுராத்திரியிலே கொசவன் ஊட்டுக்கும் தச்சன் ஊட்டுக்கும் நடுவால இருக்குற அவ ஊட்டுக்குப் போயி அவளக் கண்ணாலம் கட்டிக்கிட்டான்.

(கூறியவர் : பெ. நடேசக் கவுண்டர், பேரங்கியூர்)
இவ்விடுகதையில், விடுவிக்கப்படும் பொருள் கதையாக அமைந்த புதிர்கள் - அதாவது கதையை விடையாகக் கூறும் புதிர்கள் - என்ற பொருளிலேயே ஆளப்படுகிறது என்று ஆறு. இராமநாதன் குறிப்பிடுகின்றார்.

(2) நல்ல நேரமிது
(கதை விடுகதை)

உன் அப்பா எங்கே?

உயிரில்லாத குதிரைமேல் ஏறிக்கினு
மயிரில்லாத காட்டுக்கு
வேட்டைக்குப் போயிருக்கார்

உன் அம்மா எங்கே?

நேற்று செத்த பிணத்தை
இன்னைக்கு இழுத்து
புதைக்கப் போயிருக்காள்

உன் தம்பி எங்கே?

நேற்று குடுத்தக் காசுக்கு
இண்ணைக்கு ஒத வாங்கப் போயிருக்கான்

நீ என்ன செய்யற?

அஞ்சி பேர
கழுத்தில் புடிச்சிருக்கண்

**கதை**

ஒரு வாலிபன் ஒரு ஊட்டுக்குப் போனான். அந்த ஊட்டுல ஒரு பொண்ணு இருந்தா. இவன் அவகிட்ட 'ஒன் அப்பா எங்க'ன்னு கேட்டான். அதுக்கு அவ 'உயிரில்லாத குதிரையாகிய செருப்பு மேல ஏறிக்கிட்டு கழனி வெளிக்குப் போயிருக்காரு'ன்னு பதில் சொன்னா.

'ஒங்க அம்மா எங்க'ன்னு அவன் கேக்க, அவ 'அம்மா நடவு நடப்போயிருக்காங்க'ன்னு சொன்னா. நடவு நடறதுக்கு மொத நாளு நாத்த புடுங்கிடுறாங்க இல்ல. அதத்தான மாறுநாளு நடறாங்க. அதனாலதான் அவ நேத்து செத்த பொணத்த இன்னைக்கு இழுத்து பொதைக்கப் போயிருக்கான்னு சொன்னா.

அப்புறம் அவன் 'ஒன் தம்பி எங்கண்ணு' கேட்டான். பள்ளிக்கொடம் போயிருக்கான்னு சொன்னா. அதாவது நேத்து பள்ளிக்கொடத்துக்குப் பனங்கட்டுனான். அவன் சரியா படிக்க மாட்டான். வாத்தியாருகிட்ட ஒத வாங்கிக்கிட்டே இருப்பான். அதத்தான்அவ, 'நேற்று குடுத்த காசுக்கு, இன்னைக்கு ஒத வாங்கப் போயிருக்கான்'ணு சொன்னா.

கடைசியா 'நீ என்ன செய்யிற'ண்ணு அவன் கேட்டான். அதுக்கு அவ 'கொழுக்கட்டப் புடிக்கிறன்'ணு சொன்னா. இட்டிலிக் குண்டானில இருக்குற அஞ்சி குழிகளுக்கும் அஞ்சி கொழுக்கட்டைய அழுத்திப் புடிச்சிக்கிட்டிருக்கன்'ணு சொன்னா

ஆக அவ தனியா இருக்கா. மத்தவங்க வர்றதுக்கு நேரமாவும். இதுதான் சரியான நேரம்ணு துணிச்சலா ஊட்டுக்குள்ள நொழஞ்சான். அவளுக்கும் அது இஷ்டந்தான்.

(கூறியவர்: சீ. இராமலிங்கம், பேரங்கியூர்)

இவையெல்லாம் காதலர்களைப் பற்றிய கதை விடுகதைகளாக உள்ளன. விடுகதை மட்டும் தெரிந்தால் போதாது; அதிலே உள்ளீடாக உள்ள கதையும் தெரியவேண்டும். பாடலிலுள்ள புதிரை விடுவிப்பதுதான் கதையாக மலர்கிறது. உண்மையில் இதைத்தான் **விடுகதை** என்று கூற வேண்டும். கதையாக விடுவிக்கப்படுகிறதல்லவா?

**தன் மதிப்பீடு: 2**

**பயிற்சியும் வினாக்களும்**

கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. விடுகதை என்பது ______________________________.
2. ____________________ இரண்டின் அமைப்பும் இதிலடங்கும்.
3. விடுகதை சிறுபான்மை ______________________ இருக்கும்.
4. விடுகதைகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?
5. கீழேயுள்ள விடுகதைகளை விடுவிக்கவும்.

1. தண்ணி கிணத்துல
   கண்ணி மிதக்குது -- அது என்ன?
2. கருப்புச்சட்டைக்காரன்
   காவலுக்குக் கெட்டிக்காரன் - அது என்ன?

## 8.2 நாகரிகமும் பண்பாடும்

நாகரிகம் என்ற சொல் புதியது, புதுமை என்ற பொருளில் வழங்கப்படுகிறது. 'நல்ல நாகரிகம் பாருங்க - நம் நாட்டினிலே, எல்லாமே புதுசுதானுங்க' என்ற தொடர்கள் இதனை விளக்குகின்றன. தலையை ஒப்பனை செய்து கொள்வது, ஆடை அணிகளால் உடலை ஒப்பனை செய்து கொள்வது போன்ற மக்களின் புறக்கோல வளர்ச்சி நிலைகளே நாகரிகம் என்று அழைக்கப்படுகின்றன. நாகரிகம் உணவிலும் உடையிலும் இது போன்ற பிற வாழ்க்கையின் ஆரவாரங்களிலும் தோன்றுவது என்றும் கூறுவர். 'நாகரிக பொடவ கட்டி' என்ற தொடர் இதனை விளக்குகிறது. மேலும் உறைவிடம், பயன்படுத்தும் மனைப்பொருள்கள், உணவு முறைகள், வாகனங்கள் முதலியனவும் நாகரிகக் கூறுகளாகப் பேசப்படுகின்றன. "எனவே மக்களின் புறவாழ்க்கையின் - புறக்கோலத்தின் - வளர்ச்சி மாற்றங்களை நாகரிகம் என்று குறிப்பிடலாம்.

பண்பாடு என்பது மக்களது அறிவு நலம், கருத்து நலம், குணநலம், கொள்கை நலம், ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மேன்மேலும் திருந்தி வரும் நிலை என்று விளக்குவர். பண்பாடு என்பதற்கு மனவளர்ச்சி மேன்மேலும் திருந்தி வரும் திருத்த நிலை எள்று விளக்கலாம். அறிவு வளர்ச்சி, கலை வளர்ச்சி என்பன மனவளர்ச்சியோடு தொடர்புடையன என்றும் வரையறை செய்து கொள்ளலாம். மக்களின் பேச்சுக்கள், நகைச்சுவைகள் சமுதாயத்தில் காணப்படும் கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், திருவிழாக்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகளின் வாயிலாக மக்களின் பண்பாட்டு நிலைகளை நாட்டுப்புறவியல் விளக்கி நிற்கின்றது''.

நாகரிகமும் பண்பாடும் என்ற இப்பகுதியில் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் விளக்கப்படுகின்றன.

### 8.2.1 நம்பிக்கைகள்

'நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்' என்ற நூலில் ஆறு. இராமநாதன் நம்பிக்கைகள் பற்றிய கருத்துக்களைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்:

தன்னுடைய சொந்தக் குணத்தை ஒரு சமூகம் மாற்றும் போது அல்லது இழக்கும் போது அதற்கு ஏற்ப முன்பே அமைந்திருந்த நடைமுறைகள் 'நம்பிக்கைகளாய்' எஞ்சுகின்றன.

வழிபாடு, பழக்க வழக்கங்கள், சடங்குகள், சகுனம் பார்த்தல், கண்ணேறு கழித்தல், வாய்ச்சாபம் இடல், தலையெழுத்து என்று கூறல் போன்றவை நம்பிக்கை அடிப்படையிலேயே அமைகின்றன. இவற்றுள் தலையெழுத்து, சகுனம் ஆகியவை மட்டும் இவண் விளக்கப்படுகின்றன.

#### (1) தலையெழுத்து

ஒருவன் பிறக்கும்போதே அவன் வாழ்க்கை இவ்வவ்வாறு

அமையும் என்பதைக் கடவுள் அவன் தலையில் எழுதிவிடுவான் என்று கூறும் நம்பிக்கை மக்களிடம் காணப்படுகிறது. மனித மண்டையோட்டில் குறுக்கும் நெடுக்குமாகக் காணப்படும் இணைப்புக் கோடுகளே இந்நம்பிக்கை தோன்ற அடிப்படைக் காரணம் என்பர்.

எ-டு: ''.........................................
நானம் செய்யப் போனெடத்த அவோ
தங்கே தவறிப்போனா
.........................................
.........................................
தண்ணியாலே குத்தமில்ல அவோ
தங்கே தலை எழுத்து''

(ஸ்நானம் செய்யப் போனெடத்த - குளிக்கப் போன இடத்தில்)

என்ற இப்பாடல் ஒரு பெண் தண்ணீரில் விழுந்து இறந்ததற்கு அவளுடைய தலையெழுத்தே காரணம் என்கிறது. 'எமன் தலையெழுத்துப்படிதான் செய்வான்;அதை மீறி அவனால் கூட எதுவும் செய்ய முடியாது என்பதை மற்றொரு பாடல் கூறுகிறது.

''எழுத்தும்படி ஆனா
எமன் என்ன செய்வான்
விதியும்படி ஆனா
வீமன் என்ன செய்வான்''

### (2) சகுனம்

சகுனம் பார்க்கிற பழக்கம் எங்கும் காணப்படுகின்ற ஒரு நம்பிக்கையாகும். தான் எடுத்துக் கொண்ட செயல் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் அல்லாது வெற்றி பெறாதோ என்ற அச்சம் இதற்கு அடிப்படையாகும். எதிர்பாராத ஒன்று நிகழ்ந்து விட்ட போது, காரணம் காட்டி மனச்சாந்தி அடையவும் சில சமயம் இது பயன்படுகிறது.

மனிதச்செயல்கள், பறவை விலங்குகளின் இயக்கம், இயற்றை நிகழ்வுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சகுனங்கள் பார்க்கப்படுகின்றன. முன்பு இதை நிமித்தம் என்றார்கள். அசரீரி எனப்படும் விரிச்சி என்பதும் ஒருவகை நிமித்தந்தான். நல்ல சகுனத்தைக் கண்டால் ஒரு காரியத்தைத் தொடர்வர்; தீய சகுனங்கண்டால் தொடங்கியதை நிறுத்திவிடுவர்.

பயணம் போகும்போது எதிரே மங்கலப் பெண்கள் வர வேண்டும்; தண்ணீர் நிறைகுடத்துடன் வர வேண்டும். விதவைகள் எதிர்ப்பட்டுவிடக்கூடாது.

தும்முதல் தீய சகுனமாகும். 'நாட்டுப்புறப்பாடல் காட்டும் தமிழர் வாழ்வியல்' என்ற தம் நூலில் ஆறு. இராமநாதன், இங்ஙனம் தும்மலைப் பொருட்படுத்தாமல் திருமணம் செய்து கொண்ட ஒருவன் தானும் இறந்து, மனைவியும் உடன்கட்டையேறி எல்லாம் அவலமாக முடிந்ததைக் கூறும் நாட்டுப்பாடலைக் காட்டி விளக்குகிறார்.

### தன் மதிப்பீடு: 3

### பயிற்சியும் வினாக்களும்

I கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நாகரிகம் என்ற சொல் ____________________ என்ற பொருள்களில் வழங்கப்படுகிறது.
2. மக்களின் புறக்கோல வளர்ச்சி நிலைகளே ____________ என்றழைக்கப்படுகின்றன.

II வினாக்களுக்கு விடையளிக்கவும்:

1. பண்பாடு பற்றி விளக்குக.
2. பண்பாட்டுக்கூறுகள் யாவை?
3. நம்பிக்கை: சிறுகுறிப்பு வரைக.
4. நம்பிக்கை அடிப்படையில் அமைந்த பொருட்கூறுகள் யாவை?

III சகுனங்கள் சில கூறுக. கீழே சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. நீங்கள் அறிந்த, கேள்விப்பட்ட ஒரு சிலவற்றை எழுதுக.

1. காக்கை கரைந்தால் விருந்து வரும்.
2. வெளியே செல்லும் பொழுது பசுவைப்பார்த்தால் நல்லது நடக்கும் இல்லது எதிர்கொண்ட செயல் நலமாக முடியும்.
3. பூனை குறுக்கே போனால் தொடர்ந்து போகக்கூடாது.
4. தேளைப் பார்த்தால் ரன் கொட்டினால்கூட நல்ல சகுனம்.
5. பல்லி சொல்லுக்கு - சத்தத்திற்குப் பலனுண்டு. பல்லி தலையில் விழுந்தால் மரணம் சம்பவிக்கும்.

## 8.3 பாடத்தொகுப்புரை

நாட்டுப்புறவியல் என்றால் என்ன என்பதை நன்கு விளங்கிக் கொண்டோம். அதன் உட்பிரிவுகளில் தலையாய நாட்டுப்புறப் பாடல், கதை ஆய்வுக்காகத் தாலாட்டு, காதலர் விடுகதை இரண்டினையும் விரிவாகப் பார்த்தோம். மக்கள் பற்றிய ஆய்வில் 'நாகரிகமும் பண்பாடும்' பற்றிய ஆய்வை எடுத்துக் கொண்டு அதில் நம்பிக்கைகளில் அடங்குத் தலையெழுத்து, சகுனம் இரண்டையும் பற்றிப் படித்தோம்.

தமிழில் நாட்டுப்புறவியல் தமிழ் இலக்கிய வளர்ச்சியோடும் தமிழர்கள் பற்றிய தொல் பொருளாய்வு, வரலாற்றாய் வோடும் தொடர்புபட்டு நன்கு வளர்ந்து வருகிறது. தமிழ் மொழியோடும் இலக்கியத்தோடும் முன்பே தொடர்புள்ள துறை இது. எனவே ஏனைய துறைகளைவிட இது தமிழில் நன்கு தழைத்துப் பல்கி வளர்வதற்கு இடமிருக்கிறது. இவ்வுண்மைகள் பலவற்றை இப்பாடத்தின் வழி நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். மேன்மேலும் இத்துறையில் நீங்கள் ஆர்வம் கொள்வதற்கு இஃது ஒரு துண்டுகோலாகும்.

## 8.4 தொடர்ந்து படிப்பதற்குரிய துணைநூல்கள்

1. தாலாட்டு, தமிழண்ணல், செல்வி பதிப்பகம், காரைக்குடி.
2. தாலாட்டு இலக்கியம், மு. அருணாசலம், தமிழ் நூலகம், சென்னை.
3. தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், டாக்டர் சு. சண்முகசுந்தரம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
4. காதலர் விடுகதைகள், டாக்டர் ஆறு. இராமநாதன், சமுதாயச் சிற்பிகள் வெளியீட்டகம், புவனகிரி.
5. நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், டாக்டர் ஆறு. இராமநாதன், மணிவாசகர் நூலகம், மேல சன்னதி, சிதம்பரம்.
6. திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய

அமைப்பு, டாக்டர் சு. சண்முகசுந்தரம், காவ்யா, 8, சாஸ்திரி நகர், II கிராஸ், பெங்களூர்-38.

தமிழில் நூற்றுக்கணக்கில் நாட்டுப்புறவியல் தொடர்பான நூல்கள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. இத்துறையும் பல வகைகளாகப் பிரிந்து, விரைந்து வளர்ந்து வருகிறது. 'தமிழக நாட்டுப்புறவியல்' பற்றிய முத்திங்களிதழ் ஒன்றும் வெளிவருகிறது. இத்துறையில் ஊக்கமும் ஆர்வமும் உடையவர்கள் இவற்றைத் தேடிப் பெற்றுப் படித்து, இத்துறையில் தம் திறமையை வளர்த்துக் கொள்ளலாம்.

**தன்மதிப்பீடு: விடைகள்**

1. அ. குழந்தையின் அழுகை ஒலியை அடக்கத் தாய் இதழ்களைக் குவித்து, நாவினை ஆட்டி ஒரு விதக் குரலையிடுவதே தால் ஆட்டு எனப்படும். அதைத் தொடர்ந்து இசைக்கும் பாட்டும் இன்று தாலாட்டு எனப்படுகிறது.

   ஆ. நாட்டுப்புற மக்களின் இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கையாவும் நாட்டுப் புறவியலாகும்.

   இ. 1. நாட்டுப்புறத்தமிழ்: நாட்டுப்புற மக்களின் இலக்கியம் (பாடல், கதை, கதைப்பாடல், விடுகதை, பழமொழி) 2. நாட்டுப்புறவியல்: இலக்கியம், கலை, பண்பாடு யாவும் அடங்கும்.

2. அ. விடுவிக்கப்பட வேண்டிய கதை/புதிர். ஆ. வினா, விடை இ. பாடுவோர் கூற்றாக.... ஈ. பாட்டு விடுகதை, உரைநடை விடுகதை உ. 1. நிலவு. 2. கதவு.

3. அ. 1. புதியது, புதுமை 2. நாகரிகம். ஆ. 1. பண்பாடு என்பது மக்களின் அறிவு, கருத்து, குணம், கொள்கை, ஒழுக்கம், வாழ்க்கை முதலியன மேன்மேலும் திருந்தி வரும் நிலையாகும். 2. மக்களின் பேச்சுக்கள், நகைச்சுவைகள், கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், திருவிழாக்கள் போல்வன பலவும் பண்பட்டுக் கூறுகளாகும். 3. ஒரு சமூகம் தன் சொந்த இயல்பை மாற்றிக் கொள்ளும் போது அல்லது இழக்கும் போது, முன்பே அமைந்து எஞ்சி நிற்கும் நடைமுறைகள் 'நம்பிக்கைகள்' எனப்படுகின்றன. 4. வழிபாடு, சடங்கு, சகுனம், கண்ணேறு, சாபமிடல், தலைஎழுத்து போல்வன பல இந்நம்பிக்கை அடிப்படையிலமைந்த கூறுகளாகும்.

   இ. புறப்படும்பொது வழியில் மங்கலப்பெண் வரவேண்டும். விளக்குத் தானே அணைவது கூடாது. யாரும் அசரீரியாக தீய சொல் சொன்னால் காரியம் பாதிக்கும். இவ்வாறு எண்ணிப்பார்த்துத் தொகுக்க வேண்டும்.